உ

பாரதி வெளியீடு
இலக்கம் உ

# ஐரோப்பா நாயகியின் பிரலாபம்
# The Lamentations of Europe.
# கீர்த்தனங்கள்

இவை
நல்லூர்
வீ. சிவபாக்கியநாதபிள்ளை அவர்களால்
பிரசுரிக்கப்பெற்றது



841.6
ஐரோ
SL/PR

விலை ச

125/-

யாழ்ப்பாணம் ஜெப்கண்டான் அச்சியந்திரசாலையில்
பதிப்பிக்கப்பெற்றது

# PREFACE

About quarter of a century ago Kaiser William of Germany goaded by a greedy fame drew into war several countries of Europe and even the distant United States of America in the year 1914.

After a bitterly fought war of four and a half years, he was defeated by the Allies and had to find a refuge in Holland. In the end Armistice was declared on 11-th day of of the 11-th month of 1918.

As a memento of that memorable date, this book entittled " Lamentations of Europe " has been written.

Today Herr Hitler the Dictator of Germany has captured several small countries and has drawn France and Britain into war in order to achieve personal fame and glory. Though he may cause much havoc in his incipient heroism, yet in two years the British Lion will lay him low and wipe out Hitlerism from the face of the earth.

This bookwill show the common people how Hitlerism will beeffaced.

**V. Shivapakkianathapillay**

Nallore
22—10....39

உ
சிவமயம்

# ஐரோப்பா நாயகியின் பிரலாபம்.

# The Lamentations of Europe.

## காப்பு

இன்னிசை வெண்பா

அன்பார் புலவருணர் ஐரோப்பா நாயகியின்
துன்பார் பிரலாபம் சொல்லுகின்ற நூலினிது
நின்றிடவே யாறுமுக நின்மலற்கு முன்னுதித்து
நின்றவனே காத்தருள்வாய் நீ.

## அவையடக்கம்

அறுசீர் விருத்தம்

மதியிலே மறுவுமுண்டு மண்ணிலே மாழையுண்டு
நதியிலே நொதியுமுண்டு நாவியிற் புனுகுமுண்டு
பதியிலே பறுகுமுண்டு பங்கமேல் முளரியுண்டு
மதியிலேன் கவியிற் சான்றோர் வழுவழு வின்மை தேரார்

## திருத்தாண்டகம்

ஊர்சிறந்து நகர்சிறந்து ஐரோப்பா நான்
உடன்பிறந்த சோதரிகள் புகழ்ந்து வாழ்த்தப்
பேர்சிறந்து சீர்சிறந்து பிரகாசித்தேன்!
பிறந்ததப்பா! திடீரெனவே யுத்தமொன்று
சீர்குலைந்தேன்! பேரிழந்தேன்! சிறப்புமிழந்தேன்! [லாப்
செப்பொணா நஷ்டமெல்லா மடைந்தேன்! பொல்
போர்புரிந்தேன் மனுமக்கள் மடியக்கண்டேன்!
புலம்பி மனசெரிந்தழுகிறேன்! ஐயோ!

## பிரலாபக் கண்ணிகள்

ஐந்துகரனுக்கிளைய ஆறுமுக வேலனடி (எ-மெ)

1 ஐயோ! ஐம்பா பூமித்தாயே!
ஆறாத்துயர் மூழ்கிவிட்டேன்!
கைவிரித்தே யோலமிட்டுத்....தாயே
கண்ணீர் விட்டழுகிறேனே!

2 ஐந்து குமாரத்திகளுள்
ஆசைக் குமாரத்தியாக
எந்த நாளும் பேணி வந்த....தாயே
என்னம்மணீ! என்ன சொல்வேன்?

3 முத்துள்ளாணி முத்துப்போலே
ரத்தினத்துள் வச்சிரம்போல்
உத்தம சோதரிகளுள்....தாயே!
உச்சிதமாய் வாழ்ந்திருந்தேன்!

4 குன்றிலொளிர் தீபமென
என்றும் பிரகாசமாக
ஒன்றாலொன்று குறையின்றித்....தாயே
நன்றாக வாழ்ந்திருந்தேன்

5 வானிலொளிர் தாரகைபோல்
மனுமக்கள் விர்த்தியாக
நானுனதுள்ளங் குளிரத்....தாயே
நாளுமம்மா வாழ்ந்திருந்தேன்

6 சோகரிய சுவாத்தியம்
சுகஞ் சொகுசெல்லாம் பெற்று
நாகரீகச் சிறப்புற்றுத்....தாயே
நானினிது வாழ்ந்திருந்தேன்

7 சிற்ப நூலிலட்சணங்கள்
அற்பமுங் குன்றாதமைந்த
பொற்பெழு மாடமாளிகை....தாயே
பொலியவே வாழ்ந்திருந்தேன்



8 சாங்கமான வீதிகளும்
தீங்கனித் தண்சோலைகளும்
பூங்காவனங்களுஞ் சூழத்....தாயே
பொற்றொடி நான்வாழ்ந்திருந்தேன்

9 சாஸ்திர விவித பாஷா
சர்வ கலாசாலைகட்கு
ஆஸ்பதமாய் நான் விளங்கித்... தாயே
ஆனந்தமாய் வாழ்ந்திருந்தேன்.

10 பஞ்சுத்தொழில் பட்டுத்தொழில்
பன்னிறக் கண்ணாடித்தொழில்
பஞ்சலோகத் தொழிலெல்லாம் ...தாயே
பாங்கா யோங்க வாழ்ந்திருந்தேன்

11 கிருஷிகங் கைத்தொழிலும்
கீர்த்தி செறி வர்த்தகமும்
வருஷிக்கச் செல்வமாரி....தாயே
மாட்சியாக வாழ்ந்திருந்தேன்

12 வேதச்சிறப்புகள் ராஜ
நீதிச்சிறப்புகள் பேதா
பேதச் சிறப்புகளெல்லாம்....தாயே
பெற்றினிது வாழ்ந்திருந்தேன்

13 இந்தவிதம் வாழ்ந்திருந்த
என்றனுக்குத் திடீரென்ன
வந்து விடிந்திட்ட கேட்டை....தாயே
எந்தவிதஞ் சொல்வேனம்மா

14 வானிடி விழுந்ததென்ன
வந்ததோர்கொடிய யுத்தம்
நானிடிமுழக்குக் கேட்டுத்....தாயே
நாகம்போல் மயங்கிவிட்டேன்

15 மூங்கிற் காட்டி னக்கினிபோல்
மூண்டெழுந்த யுத்தாக்கினி

தீங்கிழைத் தெங்கும் பரந்து....தாயே
ஓங்கியே முழாசுகுதே

16 பேரொளி உச்சிப்பகலிற்
காரிருள் கவிந்ததென்னே
பேரொளிர வாழும் நாளிற்....தாயே
சீரழிந்துலைவ தென்னே

17 நல்லதோர் மரந்தனிலே
புல்லுருவி பாய்ந்த தென்னப்
பொல்லாயுத்தமென்னிற்றோற்றித்தாயே
பொல்லாங்கு விளைப்பதென்ன

18 தான்றிக்காயுட் சனியன்போல்
தாயே யுத்தமென் மடியிற்
றோன்றிச் செய்யுங் கேடனைத்தும்-தாயே
சொல்ல வல்ல நாவுமுண்டோ

19 யுத்தமே இரத்தப்பழி
யுத்தமே நீ செய்கொடுமை
சித்திரவதை சேதங்கள்....தாயே
செப்ப நாவெழுகுதில்லை

20 விவித ஆகாய க்கப்பல்
விவித நீராவிக் கப்பல்
விவித ரதங்களினால்....தாயே
விரைந்து விரைந்து சென்றே

21 அந்தரத்தே ஆழியிலே
ஆ என் மடிமீதிலுமே
எங்கெந்த இடத்தினுமே....தாயே
சங்காரஞ் செய்கின்றாய்

22 ஈட்டியினாற் கட்கத்தினால்
யந்திரத் துப்பாக்கியினால்
மூட்டிச் சுவாலி தீக்குச்சால்....தாயே
முழங்கும் பீரங்கிகளால்



23 இடியேறெனச் சரிந்து
படீர் படீர் படீரென
நொடி நேரந்திடீரென - தாயே
வெடி பிரமாண்ட குண்டால்

24 எரிநீர்த்திராவகத்தால்
எங்கும் முகிற்படலம் போல்
விரி நச்சுப் புகையினால் - தாயே
விளைக்கின்றாயே சங்காரம்!

25 கட்டி நிரூபித்த யுத்தச்
சட்டமெல்லாம மீறித்தள்ளி
இப்படி நீ விளைக்கும் - தாயே
நட்டங்களுக கெல்லையுண்டோ?

26 நாடு நகர் ஊர்கள் சுடு
காடெனவே மாறினவே
வீடுகள் வெளித்தனவே - தாயே
கேடெங்கணுஞ் சூழ்ந்தனவே!

27 தண்மலர் விரிசோலைகள்
கண்பறி கனிச் சோலைகள்
பண்படு விளை நிலங்கள் — தாயே
பாழ்பட்டையோ போயினவே

28 உயிர்க்குணவீந்து வந்த
பயிர்த்தொழில் குன்றிப் போச்சே
பயிர்க்கிடை விர்த்தியின்றி — தாயே
வர்த்தகம் விழுந்து போச்சே

29 எத்தனையோ லட்சம் பேர்க்கு
நித்தமும் பிழைப்புத்தந்த
கைத்தொழில் தலைவிரித்துத் — தாயே
கைவிரித்தழுகின்றதே

30 வர்த்தகச் சாலைகள் நானா
கைத்தொழிற் சாலைகள் பெரும்

வித்தியா சாலைகள் மகா — தாயே
புத்தகசாலைகளோடே

31 ஆதுரர்கள் சாலைகளும்
அவுஷத சாலைகளும்
ஆதுலர்கள் சாலைகளும் — தாயே
ஐயோ நாசமாயினவே

32 நீடழகு வாய்ந்த சித்ர
மாட மாளிகை நிவாசம்
கூட கோபுரங்கள் பெரும் — தாயே
கொத்தளங்கள் கோட்டைகளும்

33 ஆயிரக்கணக்காயுள்ள
ஆலயங்கள் மாமடங்கள்
தீயினாலுங் குண்டினாலும் — தாயே
சிதைந்தழிவுற்றனவே

34 நாடிழந்தும் ஊரிழந்தும்
வீடு வாசல்களிழந்தும்
தேடு நிதிகளிழந்தும் — தாயே
வீழ்ந்திறந்தோர் எத்தனைபேர்

35 கைமுரிந்துங்கால் தெறித்தும்
கண் கெட்டுங் குடர் சரிந்தும்
மெய் முழுதுஞ் சிம்பாகியும் — தாயே
வீழ்ந்திறந்தோர் எத்தனைபேர்

36 வேகக்குண்டு பாய்ந்துருவத்
தேகமுதிரஞ் சொரியத்
தாகமின்றி நொந்தயர்ந்து — தாயே
சாவடைந்தோர் எத்தனைபேர்?

37 காயம் பட்டு வீழ்ந்த நேரம்
காலாட்படைவந்துழக்கிப்
பாயும் பரியாலே மிதி — தாயே
பட்டிறந்தோர் எத்தனைபேர்?



38 அண்டமே வெடித்ததெனக்
குண்டு வெடித்தே முழங்க
மண்டை கலங்கியே மதி — தாயே
மாறுடினோர் எத்தனைபேர்?

39 அல்லும் பகலுமாய் வெள்ளம்
நில்லகழியுட் கிடந்து
பல்வகைப்பிணியாலுயிர் — தாயே
பட்டவர்களெத்தனைபேர்?

40 உண்ணுறங்காமலே
ஒய்வின்றியே போர் மலைந்து
மண்மேலிளைத்து விழுந்து — தாயே
மடிந்தோர்களெத்தனைபேர்?

41 குற்றுயிருடையவராய்க்
குறைமூச்சடங்கினோராய்
பற்றமரித்தோருடனே — தாயே
மண் மறைந்தோரெத்தனை பேர்?

42 இருப்புக்கடற்கோட்டைகள்
எனத்தகுங்கப்பல்களைத்
திருட்டுத்தோர்ப்பிடோ தாக்கித்- தாயே
சின்னாபின்னமாயுடைக்க

43 ஆயுத பாணிகளாக
அணிவகுத்துள்ளே நின்ற
ஆயிரமாயிர வீரர் — தாயே
ஆழி மூழ்கிப்போகின்றாரே

44 ஆகாயவிமான முடைந்
ததோ கதியாகவீரர்
ஆ கமலகுண்டலமாய்.... தாயே
அந்தரத் திருள்கின்றாரே

45 பக பகவென்று தேகம்
பற்றியெரியச் செய்நீரால்

புகுபுகென்றேறுந் நச்சு .... தாயே
புகையால் மடிகின்றாரே

46 அங்க பங்கப்பட்டவராய்
ஆயிர மாயிரமாக
அங்கங்கு வருந்துவோரை.... தாயே
யாரோ எண்ணிக்காட்ட வல்லார்

47 ஆன ஊணுடையில்லாமல்
அல்லும் பகலும் வருந்தி
ஈனச் சிறைச்சாலைகளில்.... தாயே
இருப்போர் தொகை யார்சொல்வார்

48 அஞ்சி நடுங்கச்செய்யுத்தம்
ஆர்த்துச் சிறமிடமெல்லாம்
பஞ்சமுந் தொடர்ந்தேயெனைத்.... தாயே
பாழ்படுத்தி வாதிக்குதே

49 நாட்டை விட்டென்மக்கள் சொந்த
வீட்டைவிட்டு நாடோடிகள்
பாட்டை சாரிகள் போற்பிற .... தாயே
நாட்டையண்டி வாழலாச்சே

50 மாட கூட மாளிகையில்
வாழ்ந்திருந்த மக்கள் பட்டி
மாடாடுகள் போலன்னியர் .... தாயே
வீட்டுள் நெரியவோ ஐயோ

51 என்னை முட்டித்தாக்கும் போரால்
சின்னாங் கெட்ட மக்களுக்கு
அன்னமுட்டு வந்ததெனில் .... தாயே
என்ன முட்டு வந்ததில்லை?

52 அன்னதானஞ் சொர்ணதானம்
ஆடைத்தானம் ஈந்தபேர்கள்
அன்னியர் பகிர்ந்தளிக்கும் .... தாயே
அன்னமுண்ணக் காலமாச்சோ?



53 இட்டசுக செல்வஞ் சுகி
பட்டப்பிரபுடீகர்கள்
அட்ட தரித்திரராகித் .... தாயே
கெட்டலைய நேர்ந்ததென்னோ?

54 ஏவலர்கள் சுற்றி நின்று
சேவை செய்த செல்வர்களே
பாவமையோ பாவம் கஷ்டம்.... தாயே
பட்டுணவு தேடலாச்சே

55 நேர்த்தியான வர்ண உடை
நேற்றோர் சோடின்றோர் சோடாக
மாற்றி மாற்றி யணிந்தோர்க்கு.... தாயே
மாற்றவில்லை வேற்றுடையே

56 விந்தைப்பட்டு பட்டாவளி
விதம் விதமாயணிந்தோர்
கந்தை தரித்தந்தரித்துத் .... தாயே
காலம் விடவும் நேர்ந்ததோ

57 புல்லுத்தளிர் குத்திடினும்
பொங்கு மென்மைச் செல்வமக்கள்
மெல்லியர்கள் ஆடவர்கள் .... தாயே
வேர்க்க வேலை செய்துண்ணவோ

58 மேனிரை ரதம் மோட்டக்கார்
மேவிவந்து சென்றபேர்கள்
கானடையாய் எய்த்திளைத்துத் .... தாயே
காதம் பல செல்லவாச்சே

59 எண்ணெய் வழுக்குள்ளமேனி
என்புந் தோலுமாய் மெலிந்து
கண்குழிந்து கன்னமொட்டித் ....தாயே
காய்ந்துலர்ந்து போகவாச்சே

60 முட்டின்ன தென்றறியாது
முந்நேரம் பன்னோமுண்டோர்

பட்டினி பசியினாலே .... தாயே
பதைத்துச் சோரவுமாச்சே

61 லட்சப்பிரபுக்களுக்கே
பட்சணத்துக் கந்தரமேல்
பிட்சையேற்றுண்டோர்க்குயாரோ-தாயே
பட்சணம் பிட்சை யீகுவார்

62 இருப்புக்குண்டையே காற்று
இப்படி யெடுத்தெறிந்தால்
பருத்திப் பஞ்சையோ படும் .... தாயே
பாட்டைச்சொல்ல பாட்டுமுண்டோ

63 காலைதொட்டும் மாலைமட்டும்
கைத்தொழில் செய் லட்சாலட்சம்
வேலைப்பெண்கள் வேலையற்றுத்....தாயே
கூலியற்றலையலாச்சே

64 பெற்ற அன்னை தந்தையற்ற
பிள்ளைகளநேகா நேகர்
மற்றுண்டுடுத்து வாழ்ந்திட்ட....தாயே
கல்வித் தர்மசாலை விழ

65 கைபிடித்த கொப்புமின்றிக்
கால்மிதித்த கொப்புமின்றிப்
பையரும் சிறுமிகளும்....தாயே
ஐயகோ அலையலாச்சே

66 வெள்ளை மாடப்புறப்போன்ற
வெண்டாமரை போன்ற இளம்
பிள்ளைகள் பசித்தலறத்....தாயே
உள்ளந் துள்ளித் துடிக்குதே

67 நேயர் பசி நேயரெண்ணிச்
சேயர் பசி தாயரெண்ணித்
தாயர் பசி சேயரெண்ணித் ...தாயே
தாங்கொணா தயர்கின்றாரே



68 நெஞ்சம் வாதைப்பட்டுச் சாகும்
நேசருறவோரால் வாடப்
பஞ்சத்தாலுடலும் வாடத்....தாயே
பார்ப்பவரார் கண்ணாரவே

69 மண்மடியாம் என்மடியில்
மாண்டு விழ ஆண்மக்களே
பெண் குடி நிறைந்த நாடாய்த்....தாயே
பேரிடர்க் குள்ளாகின்றேனே

70 விழவு தினங் கொண்டாடும்
விதம் வாழ் வீடுகளுள்ளே
இழவு கொண்டாடா வீடோ....தாயே
எங்கேனு மில்லையே ஐயோ

71 பெற்றதாய் மனைவி யழப்
பிள்ளை சோதரிகளழ
உற்றாரழ நேசரழத்....தாயே
ஓ எங்கும் அழுகையாச்சே

72 சந்தோஷ மிகுந்த வாழ்வு
சந்தாபங் கொள்தாழ்வாயிற்றே
அந்தோ அந்தோ என்றன் மக்கள்
சிந்தாகுல மூழ்க வாச்சே

73 ஈட்டிய நிதிக்குபேரர்
மூங்கிடம் பாசாரமெங்கே,
பேட்டி கொடுப்போர்களெங்கே-தாயே
பொருச்சபைக் கூட்டமெங்கே

74 கைத்தொழில் செய்சாலைகளில்
கடற் றுறைமுகங்களில்
வர்த்தகசாலைகளிற் ....தாயே
சந்தடி ஜனமெங்கே

75 வீதியுலாப் போவாரெங்கே
வெறியாட்டயர்வாரெங்கே

சோதித்திபமேற்றிப் போலித்....தாயே
சூதாட்ட மாடுவாரெங்கே

76 சந்தடி மிகுந்திரையும்
சந்தைச் சாவடி சாய்ப்பெங்கே
பந்தடியாடவர் மாதர்....தாயே
பாலர் பாலகிக ளெங்கே

77 பாட்டிசைக் கருவி தொனி
பஜனை சமாக்க ளெங்கே
நாட்டியக் காரர்களெங்கே...தாயே
நாடகசாலைகளெங்கே

78 கின்னரம் சுரமண்டலம்
கின்னிடும் பியானோ எங்கே
பன்னரம்பு யாழ்களெங்கே....தாயே
பாடகர் கூட்டங்களெங்கே

79 பார்க்கும் கண்பகட்டியொளிர்
பயஸ்கோப்புக் காட்சி யெங்கே
சேர்க்கஸ்வித்தைசெய்வாரெங்கே-தாயே
செந்தளிப்பெல்லாம் போயிற்றே

80 எற்ஹோம் காடின்பாட்டி யெங்கே
இங்கித ரீப்பாட்டி யெங்கே
பற்பல வித்தியாசாலை....தாயே
பாலர் பிக்னிக் பாட்டியெங்கே

81 விருந்துக் கொண்டாட்டமெங்கே
விவாகக் கொண்டாட்டமெங்கே[யே
மருந்துக்கோர் கொண்டாட்டமென்-தா
மக்களிடை காண்கிலேனே

82 மதுபானம் நீர்ப்பானமாய்
மாவிருந்திலங்கனமாய்க்
குதூகுலிப்பா குலிப்பாய்த்....தாயே
கொண்டாட்டம் திண்டாட்டமாச்சே



83 கோயிலின் நடக்கும் நாளு
கொண்டாட்டச் சிறப்புகட்கும்
வாயினில் மண்போட்டிட்டது....தாயே
மாகொடிய யுத்தம்தானே

84 இந்த ஆகுலமாற்றத்தை
என்னுடைய நேசமக்கள்
வந்தேன் விடியச் செய்தார்கள்.... தாயே
யார்தாவென்றும் பார்த்தாரில்லை

85 பேராசையாம் பேய்க்குதிரைப்
பெலிமக்களே நீரிட
நீரோசை வாழ்வையோ குன்றித் -த்ாயே
நெட்டுயிர்ப்பெறிகிறேனே

86 மக்களே நீங்கள் சோதர
ஐக்கியமாக வாழ்ந்து
மிக்க பகைமூட்டுயுத்தம்.... ஐயோ
அக்கினியில் வேகுவதேன்

87 உள்ளத்தினிலே பகையும்
உதட்டு றுறவுமாகப்
பிள்ளைகளே நீ விருந்தீர்....ஐயோ
பெரும்போரிதோ காட்டுகுதே

88 கல்லும் பழந்தேங்காயும்போல்
காடையும் புழுதியும் போல்
கொல்லரவும் கீரியும்போல்....ஐயோ
கூடிப்போர் செய்கின்றீர்களே

89 நீதிப்படி கிற்பதாக
நீவிரொவ்வருவருமே
சாதித்தென் றுஞ் சொல்கின்றீரே-ஐயோ
சார்வதெவர் மேலோகுற்றம்

90 கள்ளநோக்கம் நீர்மறைத்து
விள்ளுவீரேல் நீதிநோக்கம்

உள்ளமறி ஜெகத்தீசன்....ஐயோ
உள்ளநோக்க மறியாரோ

91 பிள்ளைகளே மனுமக்கள்
தள்ளித்துடியுடலங்கள்
வெள்ளமாய்ச் சொரியிரத்தம்....ஐயோ
உள்ளளவும் மறவேனே

92 இந்தப் பேரிரத்தப்பழிக்
கெந்தப்பேர்கள் காரணரோ
அந்தப்பேர்கள்தேவாக்கினைக் குத்தாயே
எந்தவிதம் தப்புவாரோ

அன்றரசனே ஒறுக்கும்
நின்று தெய்வமே யொறுக்கும்
என்றமொழி ஒருகாலம் .... தாயே
குன்றுது நிறைவேறுமே

94 சொல்வதென்ன வென்றேன் கரி
தோற்றவனே சாம்பலென்று [யே
எல்லோருமே சொல்லு மொழிக்குத்-தா
இலக்காக நிற்கின்றாரே

95 ஊர்பெருத்த தேசநாசம்
சீர்திருத்த மென்றுசொல்லின்
ஆர் பொருத்தமென் றுரைப்பார்-ஐயோ
நேர்விருத்த மல்லோ தாயே

96 தள்ளிவைத்த பேர்க்கருவை
சட்டமீறி நீர் பாவித்துக்
கொள்ளிதாய்க்குவைக்கின்றீரே....ஐயோ
குடிக்கினஞ் செய்கின்றீரே

97 கற்றவித்தை யென்மக்களோ
பெற்றதாயிற் காட்டலாமோ
உற்றபுத்தி சூட்சமெல்லாம்....ஐயோ
உயிர்கொல்லப் பாவிப்பீரோ



98 பலத்துக் கிசையமனுப்
பலியென்று மிடலாமோ,
குலத்துக் கினமாகவே....தாயே
கோடரிக் காம்பெழும்பவோ'

96 உடுத்த ஆடை யேபாம்பாய்க்
கடித்திடவோ,நாள்பெற்றிங்
கெடுத்து வளர்த்தமக்கள்—ஐயோ
எனக்கிடர் வருத்தவோ,

100 சூஸ்திர அறிவோ நானு
தொழிலறிவோ விவித
சாஸ்திர அறிவோ எல்லாம்....தாயே
சங்காரத்துக் கேதுவாச்சே!

101 பேராகுல மிஞ்சுகுதே!
பெருமூச்செழும்புகுதே
யாரோடு சொல்லி யழுவேன் .... தாயே
ஆறுத லெங்வாறடைவேன்

102 'ஆதி முதல் ராசபக்தி
வேதபக்தியுள்ள மூத்த
சோதரியே ஆசியாவே .... ஐயோ
பேதலிக்குதையோ உள்ளம்

103 ஆதரித்து நான்வளர்த்த
ஆபிரிக்காச் சோதரியே
ஏதொருதுணையு மற்றே .... ஐயோ
ஏம்பலித்தழுகிறேனே

104 என்னைத் தொட்டு ஆளாய்வந்தே
இலங்குமமெரிக்காவே
நன்னய சகோதரியே .... ஐயோ
நற்சமாதானம் பேசாயோ

105 சிந்திரம் வற்றுவதும்
சீவவதை நீங்குசதும்

சிந்தாகுலம் மாறுவதும் .... ஐயோ
சிவமே இனியெக்காலம்

106 இவ்வளவாய் நான்புலம்ப
எனக்கொரு ஆறுவார்த்தை
எவ்விதங் கூறுதிருப்பாய் — தாயே
என்னைப்பெற்ற பூமித்தாயே

107 ஒழுகுங் கண்ணீர்த்தாரையை
ஓர்முறையும் பார்த்திலையோ
அழுகுரலோசை தனைத் — தாயே
அம்மணி நீ கேட்டிலையோ

108 உன்மடியிலே விழுந்து
ஓலமிட்டுக் கோவென்றழும்
என்முகத்தைப் பார்த்திடாயோ — தாயே
என்னை ஆற்றித் தேற்றிடாயோ

பூமித்தாயின் தேற்றுரைக்கண்ணிகள்

(இ-ம்) ஆரபி (தா-ம்) ஆதி
அடைக்கலமே அடைக்கலமே (எ மெ)

## பல்லவி

என்மகளே ஐரோப்பாவே
என்மனசோ தாங்கதில்லை
எரி தீயில் நெய் வார்க்காதே

## அநுபல்லவி

தேறுவதெவ்வாறு மனம்
கூறுவ தெவ்வாறுறுதல்
தாறு மாறிழைக்கும் யுத்தஞ்
சீறி யெழக்காரணமென் (என்மகளே

## சரணங்கள்

காரணமில்லாமலொரு
காரியம் பிறந்திடாதே



ஆரணங்குரவர் சொல்லுங்
காரணமறிந்திலாயோ
தேவ வேதஞானம் நீங்கத்
தீய ஆசா பாச மோகப்
பாவங் குடி கொண்டு விடத்
தேவ கோபம் பொங்கியதே (என்மகளே

கெட்ட நடன சாலைகளால் 2
கெட்ட கலா சாலைகளால்
கெட்ட அச்சுச் சாலைகளால்
கெட்ட பத்திரிகைகளால்
கெட்ட போதநூல்களினால்
கெட்ட சித்திரங்களினால்
கெட்ட மதுபானங்களால் (என்மகளே

கெட்ட தொடரா முறியால் 3
கெட்ட குடும்பங்களால்
கெட்ட மாதிரிகைகளால்
கெட்ட நடைக்கோலங்களால்
கெட்ட அவிசுவாசத்தால்
கெட்ட பிரமாணங்களால்
கெட்ட மார்மசங்கங்களால்
கெட்ட இன்னோரன்னவற்றால் (என்மகளே

கட்டிக்கொண்டதாறுமாற்றைக் 4
கர்த்தத் துரோகங்கள் தம்மைச்
சுட்டெரி நரகாக்கினிச்
சுவாலை வீழான் மக்களை
எத்தனையென யார் சொல்வார்
எண்ணி லேட்டிலடங்குமோ
உத்தனை பாதகப்பழி
ஆ இக்காலஞ்சூழ்ந்ததுவே (என்மகளே

பாவங்கள் விண்ணூடு கேட்கப் 5
பட்டிரங் கோலமிடத்
தேவ கோபாக்கினி யுன்மேல்

திடீரென வீழ்ந்ததுவே
எவர் எது ஏகன் விடை
இன்றியாதுஞ் செய்தல்கூடும்
அவனை யறியாதொரு
அணுவும் அசையப்போமோ [என்மகளே

வெய்ய வெடிக்குண்டைத் தீயைப் 6
பின்னீட்டியை நொந்தாவதென்
எய்தவனிருக்க அம்பை
ஏனோ மனம் நோவாய் நீயே
அடிக்கு மீசன் கரத்தை
முடிச் சிரமன்னவர்கள்
பிடித்து நிறுத்துவாரோ
இடிக்கார் குடைபிடிப்பார் [என்மகளே

பெருகியெழுமாற்றின்முன் 7
வருவெள்ளம் புரளாதோ
எரிபெருந்தீ முன்பட்ட
சருகுந் தப்பிப்போகுமோ
சிந்தை நொந்து தாழ்ச்சியொடு
வந்திரக்கும் பேர்க்கிரக்கம்
எந்த நாளுஞ்செய்யுந் தெய்வம்
ஈது குன்றாச் சத்தியமே [என்மகளே

அக்கிரமப் பாதை விட்டு 8
அறநெறியே தொடர்ந்து
நெக்கு நெக்குருகி மனம்
நித்தம் வழிபாடுசெய்வாய்
சேற்று நீரில் வர்ணவாசச்
செந்தாமரை பூப்பதுண்டு
நாற்றிசை தீங்கிழையுத்தம்
நன்மை விளைப்பதுமுண்டு [என்மகளே

கண்முன் சாவுநின்று ஞான 9
கண்ணினைத் திறந்துவிட
எண்ணிய எண்ணமெல்லாம் பொய்



ஏகனே மெய்யென்றுணர்ந்து
நின்மக்களுள்ளே யெழுந்த
நிரீச்சுர வாதமிப்போ
தன் தலை கவிழ்ந்து நின்று
தள்ளம்பாறுகின்றதன்றோ [என்மகளே

காயம்பட்டு வீழ்ந்துதிரந் 10
தோயப்பெற்ற பின்புலோக
மாயத்தை யுணர்ந்து தேவ
நேயத்தையடைகின்றாரே
தேகமே நிலையில்லாத
போகமே சதமென்றோர்கள்
வேகமான தேவபக்தி
யாக ஒழுகக்காண்கின்றாய் [என்மகளே

சொல்லுஞ்செப மௌனமென்று 11
சொப்பனத்து மறியாதோர்
அல்லும்பகலுமே செபஞ்
சொல்லி மன்றாடுகின்றாரே
குண்டு மாரியிலுந்தொகை
கொண்டசெபம் போர்வீரர்வாய்
விண்டுரைத்துச் செல்லுவதைக்
கண்டு கேட்டிருக்கின்றாயே [என்மகளே

யுத்த மின்றேலவருள்ளே 12
எத்தனை பேரச்சமின்றி
மெத்தத் துரோகிகளாகிச்
சித்தசுத்தி அழிவாரோ?
இந்தவிதமுன்றன் மக்கள்
சிந்தைத் தெளிவேயடைந்து
எந்தைபரன் பாதஞ்சேரல்
எண்ணியாறுதல் கொள்ளாயோ (என்மகளே

அரசோ அவர்கப்பலோபோர் 13
புரியவிட்டது மெய்யே
பரமன் வீரர்க்கு ஞான

பாலைதகாட்ட விட்டதும் மெய்
அட்டை நோயாளி உதிரம்
உட் கொள வருந்து மதை
விட்ட வைத்தியன் நோக்கம்
வியாதியைத் தீர்ப்பதுவே (என்மகளே

கண்ணூர நீ கண்டிலையோ 14
காதார நீ கேட்டிலையோ
புண்ணியரனே கர்தர்மம்
புரிதலறிந்திலையோ
அன்னியராயுள்ள பேரும்
அன்னை பிதா சோதரம் போல்
என்மகளே செய்வதெண்ணி
நின்மனமே மாறித் தேறுயோ (என்மகளே

ஆபிரிக்காவே வட தென் 15
அமெரிக்காவே உன்னுடன்
சோபித்தழுமாசியாவே
சொந்த உங்கள் சோதரியாம்
நேசஎன்மகளைரோப்பா
நித்தங்கண்ணீர் சிந்தியழும்
ஓசை கேட்டிரங்கிய வட்
குதவி புரிந்திட்டீரோ (என்மகளே

தன்னிலை பாத்துங்களை 16
நன்மகளயிரோப்பாகண்டால்
என்னவிதமாயிரங்கி
இயன்ற ஒத்தாசை செய்வாள்
உருக்கப் பெருக்கத்தொடு
இரக்கம் நிறைந்த தெய்வம்
இரக்கங்காண்பிப்போருக்கே
இரக்கங் காண்பித்தருள்வார் (என்மகளே

சிறையாக்கப்பட்டவர்கள் 17
தேகம் குண்டுருவிப்பாய்ந்து
நிறைகாயப்பட்டவர்கள்
...பவர்கள்
...தரில்லா அன்னையர்கள்
மங்கிலியம் வீழ்ந்தவர்கள்
தந்தையை இழந்தமக்கள்
அந்தரித்த குடும்பஸ்தர் (என்மகளே

கட்டுப்படாக்கன்னியர்கள் 18
கண் முன் நிதங்கண்டு கண்ணீர்
விட்டழும் மகளைரோப்பா
மேலிரங்கக் கூந்திருங்கோ
குச்சுவீடோ குடிசையோ
மச்சு வீடோ மாளிகையோ
உச்சித தேவாலயமோ
உயர் துறவுச்சாலையோ (என்மகளே

வித்தியா விநோதசாலையோ 19
விவிதர் மசாலையோ
கைத்தொழில் புரிசாலையோ
வாத்தக சனசாலையோ
நல்லகனித் தோப்புகளோ
நன்செய்களோ புன்செய்களோ
எல்லாம் பரிநாசமாக
எங்கும்கொடும் பஞ்சமென்னும் [என்மகளே

கொடுங்கோலன் மன்னுயிரைக் 20
குடித்து வதைத்துவர
நெடுந்தாரைகள் சொரிய
நின்றுபுலம்பென் மகட்காய்
நித்தனைப் பிரார்த்தியுங்கோ
நீங்கள்நிதம் தர்மதானம்
புத்திரிக்குச் செய்திடுங்கோ
புண்ணியப் பேறீட்டிடுங்கோ (என்மகளே

ஞானமுள்ள என்மக்களே 21
தானதர்மஞ் செய்லதுயர்
வான பரனுக்குக் குட்டி

வட்டிக்கு விடுவதன்றே
யுத்த சமாதான நிலை
மெத்தத் தீவிரித்துவர
பத்தி நம்பிக்கையுடனே
நித்தியனை வேண்டிடுங்கோ (என்மகளே

22
சோதரிக்குடன் பிறந்த
சோதரிகள் நீங்களிந்த
ஆதரவு செய்யாவிடின்
யாரெவரோ செய்திடுவார்
ஆறுதலுரைக்கச் சொல்லி
ஆ மகளே கேட்டாயே நன்
கூறிய தேற்றுரையாலே
ஆறியுளந் தேறுவாயே (என்மகளே

முற்றிற்று



ஏ0
T43



நிதானவிலை! அரிய நூல்கள்!

உங்களுக்குத்தேவையான புஸ்தகங்கள் -மிகக
குறைந்தவிலையிற் பெறுமிடம்

ஸ்ரீ லங்காபுத்தக சாலையே

# ஸ்ரீ லங்கா புத்தகசாலை

வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்

இலக்கண, இலக்கிய, இதிகாச, வேதாந்த, சித்தாந்த, சமய சாஸ்திர, சம்பந்தமான சிறந்த நூல்களும், ஆராய்ச்சி முறையில் எழுதப்பெற்ற அரிய நூல்களும் ஏனைய பிற பதிப்பு நூல்களும் பள்ளிக் கூடங்களுக்குரிய பொருட்களும் கிடைக்கும்

வேண்டுவோர் நேரிலும் வி. பி. யிலும் பெற்றுக்கொள்ளலாம்

விலாசம்

ஸ்ரீ லங்கா புத்தகசாலை
வண்ணார்பண்ணை
யாழ்ப்பாணம்